1981 ஆகஸ்டு 25]

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைமைச் செயலாளர் மாற்றப்பட்டுள்ளது பத்திரிகையிலே வந்திருக்கிறது.

திரு. எஸ். என். வி. சித்தன்: நான் விளக்கம் கேட்கிறேன் மோதலுக்குப் பின்னாலே, அவர் மாற்றப்பட்டிருக்கிறார், என்பது உண்மையா, இல்லையா? எதிரொலியினுடைய எதிரொலியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளுடைய பெயரைச் சொல்லி அதற்கு விளக்கம் கேட்பது சரியான முறையும் அல்ல, மரபும் ஆகாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: செய்தி வந்த பிறகு நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதோ குருவி உட்கார பனம் பழம் விழுந்தது என்பது மாதிரி அந்தச் செய்தி வந்தது; அந்தச் செய்தியை வைத்துக் கணக்குப் போடுவது நல்லதல்ல. நிர்வாகத்திலே ஏற்படுகிற மாறுதல்களைச் சட்டமன்றத்திலே விவாதித்ததாக வரலாறும் இல்லை; மரபும் இல்லை.

(ஆ) தமிழக சுற்றுலாப் பயணிகளில் ஒருவர் இலங்கையில் கொலையுண்டிருப்பது

டாக்டர். மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இலங்கைக்கு, தமிழகத்திலிருந்து சுற்றுப்பயணம் சென்ற பல தமிழர்களில் கதிர்காமத்திலிருந்து சுற்றுலாவை முடித்துவிட்டுத் திரும்புகின்ற வழியில் தனபதி என்கிற ஒரு தமிழ் வாலிபர், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர், கொலை செய்யப்பட்டார், சிங்கள வெறியர்களால், என்ற செய்தி ஏடுகளில் வந்திருக்கிறது.

நேற்றைய தினமே அமிர்தலிங்கம் அவர்களுடைய செயலாளர் எனக்குத் தொலைபேசி மூலம் அந்தச் செய்தியைத் தெரிவித்தார். நம்முடைய முதலமைச்சருக்கும் இலங்கையிலிருந்து அதிகார வட்டாரத்திலிருந்து அத்தகைய தகவல் தரப்பட்டதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்துள்ளது. மத்திய அரசுக்கும் அப்படிப்பட்ட செய்தி தரப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது.

கொல்லப்பட்ட அந்த தனபதியினுடைய உடல் தமிழகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறதா? என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? ஏற்கனவே இலங்கையில் உள்ள தமிழர்கள் கொலை செய்யப்படுவதையும் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதையும் கண்டித்து இங்கே ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இப்படிப்பட்ட கொலைகள் தமிழர்களை—இங்கிருந்து சென்றவர்களையே அடையாளம் தெரியாத

அளவிற்கு கொண்றிருக்கிறார்கள் என்றால், எந்த அளவிற் குஅங்கே தமிழர்கள்மீது படுகொலை நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது. நாம் என்ன முடிவெடுத் திருக்கிறோம்? அரசு அதுபற்றி என்ன தகவலைப்பெற்றிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: நாங்கள் இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நாங்களும் இதுபற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எழுப்பவில்லை. 'தகவல் கோரல்' என்பதன் அடிப்படையில் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பிறகு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததுபற்றி அரசு ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

திரு. என். சங்கரய்யா: கொலை செய்யப்பட்டவருடைய உடல்கூட இன்றைக்கு வருவதாகப் பத்திரிகைகளிலே செய்தி பார்த்தோம். ஆகவேதான் கட்சியின் சார்பாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தோம். ஆகவே, அன்றைக்கு நாம் பேசிய நிகழ்ச்சிகளின் தொடர்பாக இவை நடந்து கொண்டு வருவதாலே தமிழக மக்கள் மத்தியிலே பெரும் பதட்ட நிலை உருவாவ தாலேதான் நாங்கள் தீர்மானம் கொடுத்தோம். ஒருவேளை, நீங்கள் இதையே எடுத்துக் கொண்டு விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு அரசாங்கத்தின் சார்பாக பதில் கொடுக்க ஏற்பாடு செய்வது நன்றாக இருக்கும்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: நேற்று முன் தினம் அதாவது 22-ம் தேதியன்று, இதுபற்றி நீண்ட விவாதம் நடந்திருக்கிறது. அதை ஒட்டிய ஒரு சம்பவம் இது. அதுபற்றி ஒரு சிறு குறிப்பு வேண்டுமானால் இங்கே கூறச் சொல்லலாமே தவிர, மீண்டும் ஒரு முழு விவாதத்தைச் சபையிலே எழுப்புவது என்றால்- இன்னும் பல்வேறு பிரச்னைகள் குறித்து, சபையிலே விவாதிக்க வேண்டிய கருத்துக்கள் பற்றி உறுப்பினர்கள் அறிவிக்கை தந்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம்-நேரம் இருக்குமா இருக்காதா என்பது அலுவல் ஆய்வுக் குழுவிலே உறுப்பினராக இருக்கிற திரு. சங்கரய்யா அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன்; ஆகவே, இப்பொழுது நிகழ்ந்து விட்ட சம்பவம் பற்றிய தகவல்கள் ஏதாவது வந்திருந்தால், அதை அரசு தெரி விக்கலாம்,

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதிர்காமத்திற்குத் தமிழகத் திலிருந்து சென்ற சுற்றுலா பயணிகள் திரும்பி வருகின்ற வழியில் கார் கேடுபாடடைந்து அதன் விளைவாக சில பேர்கள்

தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, சிலரால் தாக்கப்பட்டு ஒருவர் இறந்து விட்டார் என்ற செய்தி நேற்று காலை எனக்கு நேரடியாக இலங்கை வெளிநாட்டு அமைச்சரிடமிருந்து தொலைபேசியில் வந்தது. அதைச் சொன்னவர் வருத்தத்தோடு இலங்கை ஜனாதிபதியினுடைய வேதனையையும், அவருடைய அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதாகச் சொல்லி, அதோடு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது என்பதையும் குறிப்பிட்டு அண்மைக் காலத்தில் அவர்கள் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக அமைதி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அந்த வெளிநாட்டு அமைச்சர் சொன்ன வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்—'வேண்டுமென்றே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவைக் கெடுப்பதற்காக யாரோ சதி செய்வதாக நாங்கள் சந்தேகிக்கிற அளவுக்கு இங்கே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன'' என்று சொன்னார்.

இதைப்பற்றி நாங்கள் மேலும் விசாரணை செய்கிறோம் என்பதையும், நான் சொல்கின்ற இந்தச் செய்தியை நீங்கள் எப்படி தெரிவிக்கவேண்டுமோ அப்படித் தெரிவித்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னார். நான் இது போதாது என்றும் நீங்கள் டெலக்ஸ் அனுப்புங்கள் என்றும் கேட்டுக் கொண்டேன். அவர்களுடைய தூதரகத்தின் மூலமாகக் கடிதம் வந்திருக்கின்றது. அதிலேயும் இதே செய்தியைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இன்று மாலை அந்தச் சடலம் வருகின்றது என்ற தகவல் வந்திருக்கின்றது. இதைவிட அதிகமாக நான் இதைப்பற்றிச் சொல்வது சரியாக இருக்காது. மத்திய அரசுக்குத் தகவல் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், விவரம் கிடைத்தவுடன் இந்த அவையிலே வைக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை

பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்ற பகுதிகளை சில நாளேடுகள் பிரசுரித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

22-8-1981 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி, அதன் விளைவாக சில விவாதம் நடந்து, அனைத்தும் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று நான் தீர்ப்பளித்தேன் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவு இருக்கலாம். அப்போது நான் குறிப்பிட்டது — ''.... ஆகவே, இதுவரை நடைபெற்ற சம்பவங்கள், வாதங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறாது....'' ''.... ஆகவே இதுவரையிலும் நடைபெற்ற அத்தனை வார்த்தைக் குறிப்பு